**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2023 - ம் ஆண்டு ஜுன் திங்கள் 30 - ம் நாள், வெள்ளிக்கிழமை.

**வ.வி.எண்.3/2020**

**இன்**

**அசல் வழக்கு எண்.27/2020**

1. C.S. சுபாஷ்
2. R. சுபின்
3. R. முத்து குமார்
4. Y. சுரேஷ் ... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1. P. உபல்டு ராஜ்
2. G. சகாய ராஜேஷ்
3. செயல் பொறியாளர்
4. மேற்பார்வை பொறியாளர்
5. துணை இயக்குநர்
6. செயல் அலுவலர்
7. உதவி பொறியாளர் (மாசு கட்டுப்பாடு)
8. துணை இயக்குநர்
9. மாவட்ட ஆட்சியர்,
   கன்னியாகுமரி மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது, 30.06.2023 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஞாண் சேவியர் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்…

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 - ன் கீழ் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுவின் சாரம்சப்படி, வழக்குப் பட்டிகை சொத்தின் தற்போதைய உண்மை நிலவரம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தும் வகையில், வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டும் என்றும், இல்லாது போனால் தமக்கு பெரும் இழப்பீடு ஏற்படும் என மனுதாரர்கள் மனுவில் தெரிவித்துள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில், எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை.

**3.** வழக்கறிஞர் திரு.G.சுதானந்தா வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்படுகிறார். வழக்கறிஞர் ஆணையர், ஆணையை பெற்றுக் கொண்டு, தாவா சொத்தை பார்வையிடுவதற்கு முன்பாக, அனைத்து தரப்பினர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து, இரு தரப்பினர்களின் முன்னிலையில் பார்வையிட்டு, களநிலவரத்தை குறிப்பெடுத்து கொண்டு, தாவா சொத்தினை தகுதி பெற்ற ஒரு கள அளவையரின் உதவியோடு அளந்து, வரைபடம் தயாரித்து, தாவா சொத்துக்களைக் குறித்து புகைப்படம் மற்றும் வரைபடம் ஆகியவைகளையும் கூட்டி முழுமையான ஒரு அறிக்கை தாக்கல் செய்ய பணிக்கப்படுகிறார். வழக்கறிஞர் ஆணையர் கட்டணமாக ரூ.7,500/- நிர்ணயிக்கப்படுகிறது. இந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் கட்டணத்தை வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 - ம் ஆண்டு ஜூன் திங்கள் 30 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

மா.உ.நீ., இரணியல்.

**வரைவு/ சீரான உத்தரவு**

வ.வி.எண்.3/2020

இன்

அசல் வழக்கு எண்.27/2020

தேதி 30.06.2023